# வரை

*Varai*

ugust, 2010 | அறிவோம் ஆயிரம் | 08



30/-

## நான் கண்ட சாரங்கன்

ரதன்

அறிவியல் பல்சுவை மாசிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி



அறிவோம் ஆயிரம்

# வரை

அறிவியல் பல்சுவை மாசிகை

தொடங்குக பணியைத் தொடங்குக அறத்தை!
கடலிலும், வானிலும், கவினுறு நிலத்திலும்,
வாழ்வுயிர் அனைத்தும் மக்கள் கூட்டமும்,
வாழுமாறு - அன்பு மணிக்குடை யின்கீழ்
உலகினை ஆண்டார் உயர்வுற நம்மவர்.

*-பாரதிதாசன்*



மருத்தவ பீட மாணவமாக இருந்தும், தீராத இலக்கிய ஆவலுடன் விளங்கியவன் வை.சாரங்கன்.

உள்நாட்டு, வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் மற்றும் பத்திரிகைகள் அனைத்திலும் தடம்பதித்த கவிஞன். ஒப்பற்ற ஆற்றலுடைய, எந்தச் செலையும் திறம்பட வழிநடத்தும் ஆளுமைகொண்ட எங்கள் சாரங்கன் எம்மைவிட்டு மறைந்தது எவராலும் சகிக்கமுடியாதது.

எமது வரை மாசிகைக்கு அனங்கன், விளாடிமீர், வியாபினி போன்ற புனைபெயர்களில் கவிதைகள் கட்டுரைகளை வரைந்தும் பல அறிவியல் துணுக்குகளை வழங்கியும் எம்மை ஊக்கப்படுத்தியிருந்தான்.

வரையின் இணை ஆசிரியராக, ஒரு தூணாக நின்றிருந்த ஒரு இலக்கிய ஆர்வலன் எம் நண்பனுக்கு எமது இதய அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

வரை குழுமம்

## உள்ளே...


| | |
|---|---|
| எதுவரை..? (தொடர் கட்டுரை) | 03 |
| தமிழ் வட்டம் | 05 |
| புரட்சிக் கவி (தொடர்) | 06 |
| The Treasure Hunt | 10 |
| Proverbs and their meanings | 15 |
| Let's Learn to speak in English | 16 |
| புளி - பல் பயன்தரு(ம்) மரங்கள் | 18 |
| சோக்ரட்டீஸ் (469 399) | 24 |
| நான் கண்ட சாரங்கன் | 29 |
| நினைவக பரிசோதனை மென்பொருள் | 32 |
| மனதின் ஓசைகள் - வை.சாரங்கன் | 36 |
| பிராமிய எழுத்துக்கள் | 38 |


PUBLIC LIBRARY
JAFFNA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திய குறள்கள்



**எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவது அறிவு**

எவ்வ துறைவது உலகம் - இந்த உலக மக்கள் எப்படி வாழ் முறைகளைக்கையாளுகிறார்களோ, அவ்வதுறைவது அறிவு -அவர்களைப் போல ஒத்துவாழ்வதே சிறந்தது (அறிவு)

It is a part of wisdom to conform to the ways of the world.

-இரா வண்ணன்

## உலக நீதி

யாத்தவர் புலவர் உலகநாதன்

ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனை செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டு புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

The above verse may be translated as follows.
(a) Let not a day pass wihtout learning.
(b) Speak not evil of any one.
(c) Don't ever forget your mother.
(d) Don't associate with doers of evil.
(e) Avoid going to forbidden places.
(F) Don't engage in backbiting.
(g) Oh you heart! greet and pray to the rider of peacock.
(h) Who is the lord of Valli.

-இரா வண்ணன்





## 8 எதுவரை?

அன்பிற்கினிய

இளையதலைமுறையினரே......

மீண்டும் உங்களை இந்த மடலில் சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

சென்ற மடலில் கோப விளைவுகள் பற்றி உரையாடினோம் அதிலும் "நியாயமான கோபமாக இருந்தால் யோசிப்போம் என்றும் அது பற்றிக் கொஞ்சம் பேசுவோம்" என்றும் கூறியிருந்தேனல்லவா? சரி இப்போது அதுபற்றிக் கொஞ்சம் பேசுவோம்.

கோபம் - அதுவும் நியாயமான கோபம் - எப்பொழுதும் எமது உணர்வுகள் நியாயமானவைதான். ஆனால் மறை உணர்வுகள் சில வேளைகளில் எமது இயலாமை, துவேசம் பொறுமையின்மை, புரிந்து கொள்ளாமை போன்ற பலவீனங்களின் அடித்தளத்திலிருந்து கிளர்ந்தெழுகின்றன. அப்படி அவை எழுகின்றபோது அவற்றின் வேகம் மிகவும் தீவிரமானதாகவே இருக்கும். இத்தகைய வெளிப்பாடுகளை நாம் மிகவும் கவனமாக, நிதானமாகக் கையாளுவது அவசியம். இவை எம்மையும் பாதித்து எம்மைச் சூழ இருப்போரையும் பாதிக்கவல்லன.

ஆம் முதலில் எமக்குக் கோபம் வந்து விட்டது என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அடுத்து எம்மைக் கோபம் ஊட்டியவர் யார் - அல்லது எது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கோபமூட்டியவர் எமக்கு மிக நெருங்கிய உறவினரா? மிகவும் வேண்டப்பட்டவரா? என்று பார்க்க வேண்டும். ஏனெனில் அவருக்கும் எமக்கும் இடையில் உள்ள உறவு விரிவடையாமல் பார்த்துக் கொள்வது அவசியம். சிறிய ஒரு சம்பவத்தினால் ஏற்பட்ட கோபத்தால் பல வருடங்கள் உரையாடாமல் இருந்த எத்தனையோ பேர் மிக நீண்ட இடைவெளியின் பின் தான் தம்மை உணர்ந்து உறவைப் புதுப்பித்துக் கொண்டிருக்கின்றனர். சில வார்த்தைப் பிரயோகங்கள் உள்ளத்தின் ஆழத்தில் மாறாத வடுவை ஏற்படுத்தி விடுகின்றன. எமது வாழ்க்கைக் காலத்தில் தூக்கத்தில் கழிக்கின்றபோது மட்டுமே நாம் நெருக்கடிக்குள்ளாகாத நேரம். அதில் கூடக் கனவுகள் வந்து அமைதியைக் கெடுத்து விடுகின்றன. எனவே வாழப் பிறந்தவர்கள் நாம். அநியாயமாக எமது வாழ்நாளையே சுருக்கிக் கொண்டு விடுகின்றோமே. மேலும் வீணான எண்ணங்களை எண்ணி எண்ணி எம்மை நாமே கவலையடைய வைத்துவிடுகின்றோம்.

"வேண்டாம் அதை விட்டு விடுங்கள்" என்றால் அதற்கும் கோபம் பொங்கிக்கொண்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகின்றது. "சரி மறந்துவிடுவோம்" என்றால் "நல்ல கதை எப்படி மறப்பது" என்று பாய்ந்து பிராண்டி விடுவோம். ஒருவரைப் பார்த்து மனம் நிறைந்து சிரிக்கும் போது அதிகரிக்கின்ற முக அழகிற்கு நிகரே கிடையாது. அதேவேளை, ஒருவரைப் பார்த்தும் முறாய்ப்பாகத் தனியே வெடுக்கென்று திரும்பிக் கொள்கின்ற போது எத்தனை தசை நார்கள் இறுகிக் கொண்டு விடுகின்றன. முக அழகே கோணிக்கொண்டு அசிங்கமாகி விடுகின்றது. தயவு செய்து கோபம் அதிகரிக்கும் போது உங்கள் முகத்தை ஒரேயோர் தடவை கண்ணாடியில் பாருங்கள் கவனம்! கண்ணாடியைத் தொடாமல் தள்ளி நின்று பாருங்கள். அதுவரை அடுத்த மடலுக்காய் தயார் செய்ய விடைபெறும்

பகீரதி அலெக்சாண்டர்
ஆசிரியை, யா/ மகாஜனக் கல்லூரி

# விவேக வரிகள்



1. எப்போதும் நல்லதை மட்டுமே மனதால் நினையுங்கள், அப்போது நல்லவை மாத்திரமே நடக்கும். நினைக்கும் பொருளாகவே ஆகும் தன்மை நம்மிடமே இருக்கிறது.
2. எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள். தைரியமாகவும் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.
3. பொறுமையும் விடாமுயற்சியும் எமது நல்ல நண்பர்கள். எப்போதும் இவற்றுடனேயே இணைந்திருக்கப் பழகுங்கள்.
4. பிறர் முதுகுக்கு பின்னால் நாம் செய்ய வேண்டிய வேலை "தட்டிக் கொடுப்பது மட்டும் தான்"
5. கடவுள் இருந்தால் அவரை நாம் காண வேண்டும், ஆத்மா இருந்தால் அதனை நாம் உணர வேண்டும். அப்படியில்லையென்றால் நம்பிக்கை இல்லாதிருப்பது நன்று. பாசாங்கு போடுவதைவிட நாத்திகனாக இருப்பது மேல்.

சுவாமி விவேகானந்தர்





**தமிழ் வட்டம்**

திரு. க. ஆழ்வாப்பிள்ளை

## கொன்றிடப்பாவம், தின்றிடத் தீரும்

இம் முதுமொழியைச் சிலர் பிழையாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கொல்வது பாவம். அந்தப்பாவம் அந்த ஊனைத் தின்றுவிட்டால் தீர்ந்து விடுமென்றால் எவ்வாறு பொருந்தும்?

ஒருவர் சொன்னார் தின்றிடத் தீருமென்றால்- "தின்றிட இச்சை தீரும்" என்றார், இச்சை என்ற சொல்லை இடையில் போட வேண்டும் என்றார். அப்படிச்சொல்லி பெருமையோடு சிரித்தார். இங்கு ஆய்விற்குரிய பொருள் பாவம் என்பதுதான். இச்சையல்ல.


உண்மையில் இங்கே இருக்கும் தத்துவம் (மெய்ப்பொருள்) என்னவெனின் சைவசமயசாரணக் கொள்கையின் படி பார்க்கையில் "ஒருவர் நான் ஆட்டைக் கொல்லவில்லை. நான் இறைச்சியைச் சாப்பிட்டது மட்டும் தான், எனவே கொன்றவனுக்குத்தான் அப்பாவம், எனக்கில்லை" என்று விவாதம் பண்ண முடியாது. இறைச்சி உண்பவர்கள் இருப்பதனாற்றான் அவன் ஆட்டைக் கொலை செய்கிறான். எனவேதான் கொல்லாமை என்ற விரதத்தின் படி கொன்றவனுக்கும் அதைத்தின்றவனுக்கும் ஒரே பாவம்தான்.

எனவேதான் இம் முது மொழியின் படி "கொன்றிடப்பாவம் தின்றிட வந்து தீரும்" என்று கொள்ள வேண்டும். கொன்றவனுக்கு உள்ள அதே பாவம் தின்றவனுக்கும் வந்து தீரும் என்பது தான் இம் முதுமொழியின் உண்மைப் பொருள்.

என் அன்பு வாசகர்களே நீங்கள் சிறிது சிந்தித்தால் இவ் உண்மையை உணர முடியும்.

அடுத்த இதழில் உங்களைச் சந்திப்போம்.

ஒருவன் :- நீங்கள் என்னவாக இருக்கிறீர்கள்?
மற்றவர் :- நான் ஒரு பல் டாக்டரா இருக்கிறேன்.
ஒருவன் :- அப்போ மீதி 31 பல்லுக்கும் டாக்டர் யாருங்கோ?



கணவன் :- உன் மகன் என்ன செய்துவிட்டு வந்திருக்கிறான் கண்டு பார். பரீட்சைக்கு போய் இரண்டு மணித்தியாலமும் நித்திரை கொண்டுவிட்டு வந்திருக்கிறான்?
மனைவி :- அதுக்கு இப்ப என்ன? இரவெல்லாம் நித்திரை முழிச்சு படிச்சவன் ஒரு இரண்டு மணித்தியாலம் நித்திரை கொண்டால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சிக் கவி

**தொடர் 4**



திரு. க. ஆழ்வாப்பிள்ளை

நிலவே நீ நிலவல்ல ஒரு அழகான பெண், உடல் முழுவதையும் காட்டாமல் முகத்தை மட்டும் காட்டுவதற்கு காரணம்? உன் உடல் முழுவதையும் மற்றவர்களுக்கு காட்டி விட்டால் "காதல் என்ற கொள்ளைநோயில் இவ்வுலக மக்கள் இறந்து விடுவார்களோ" என்ற அச்சத்தாலா? இந்த வானம் என்ற சோலையில் பூத்த ஒரே பூ நீதான். பொன்னினால் செய்த பாற்குடமோ? அமுத ஊற்றோ? காலையில் வந்த கதிரவன் கடலில் மூழ்கி அதன் கனல் தன்மையெல்லாம் மாறி குளிர் கொண்ட ஒளியின் பிளம்போ நீ?. மாலை இருள் நான் கருகுகின்ற உலகைக் கண்டேன். அதே போல் அழகிய வானத்தைக் கண்டேன். திசைகள் கண்டேன். பின்பு வந்த அந்தக் கரிய இருள் சிரித்து விட்டதா அந்தப் பெருஞ்சிரிப்பின் ஒளிதருகின்ற முத்தோ நிலவே நீதான். உலகிலுள்ள அழகை யெல்லாம் சிந்தாமல் சிதறாமல் ஒன்றுசேர்ந்து குளிரூட்டி கொடுத்த சிறப்போ நீதான். உன்னைக்காணுகின்ற நேரத்தில் நெஞ்சிலே அறிவெழும் உணர்ச்சியினை எழுதுவதற்கு நினைத்தாலும் வார்த்தைகள் வருவதில்லை. உனை என் இருவிழிகளாலே பார்க்கிறேன். ஒளி பெறுகின்றேன். என்னிடமுள்ள இருள்களை ஒதுக்குகின்றேன். இன்னல்கள் எல்லாவற்றிலுமிருந்து நலிர்க்கின்றேன். மகிழ்ச்சி கொள்கிறேன். எரியவில்லை. உள்ளும், புறமும் குளிர்கின்றேன். அன்பு உள்ளம் பூணுகிறேன். அந்த அன்பு பற்றி ஆகாயமளவு அன்பு கொண்டேன் முழுநிலவே! இன்பமேனும் பாலூறை நீ! குளிர் விளக்கு நீ! என்னை மறந்துவிட்டேன் உன்னோடு கலந்ததனாலே.

இங்கே பாரதிதாசனின் கவிநயம் அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது. பல இருப்பினும் சிலவற்றை வாசகர்களுக்கு அன்போடு தருகின்றேன். நாம் இலகுவாக ஒரு விடயத்தை விளங்க வைப்பதற்குத்தான் உதாரணங்களைக் கையாளுகிறோம். இதற்கு உதாரணமாக "கண்டி நகரம் எப்படி இருக்கின்றது?" என்று ஒருவர் கேட்கின்றார். கண்டியிலிருந்து வந்தவர் கூறுகின்றார் சொர்க்கம் போல் இருக்கின்றதென்று. ஒருவர் சொல்கின்றார் "திருமணவீட்டிலே பாளம் கொடுத்தார்கள் அது தேவாமிர்தம் போல இருந்தது" இங்கே நான் பிழைகள் ஏற்படுகின்றன. சொர்க்கம் போல கண்டி இருக்கிறது என்றால் சொர்க்கத்தை யார் பார்த்தார்கள்? தேவாமிர்தம் போல் பாளம் இருக்கின்றதென்றால் தேவாமிர்தத்தை யார் குடித்தார்கள்?. இப்படித்தான் உதாரணம் சொல்லப்படுகிறபட்டு உதாரணத்திற்கே சிக்கல் ஏற்படுகின்றது. இப்படித்தான் பல புலவர்களும், சிறந்த பேச்சாளர்களும் என்று கருதப்படுகின்றவர்களும் செய்கின்ற கொடுமைகள்.

இங்கே புரட்சிக்கவி அன்றன் புலவன் உதாரன் முழுநிலவைக் காணும் மகிழ்வுக்கே சொல்லிய உதாரணம் இயற்கை உதாரணமாக இருக்கின்றது.

வாழ்நாள் எல்லாம் கஸ்டப்படும் ஏழை நல்ல உணவுகள் சாப்பிட முடியாத நிலையில் இருக்கின்றான். வீட்டிற்குப் போதும் அந்த ஏழை நாழுவது பசிக்கு குடிக்கக் கிடைக்குமா என்ற வேதனையோடு சந்தேகத்தில் வீட்டில் புகுகின்றான். அவன் கூழுக்காக தேடும் போது ஓர் பெரிய பானை நிறைய வெண்சோறு இருக்கக்காண்கின்றான்.கூழைத் தேடிப்போனவனுக்கு, பல நாட்களாக சோறே இல்லாமலிருந்த இந்த ஏழைக்கு அந்த வெண்சோற்றைப் பார்த்தால் எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படும். இதைத்தான் பாரதி தாசன் ஓர் சிறந்த இலக்கியச் சுவையோடு புலவன் சந்திரனைக் காண ஏற்படும் இன்பத்திற்குச் சமமாக கவிஞன் கூறுகின்றான். மேலைத்தேய அறிஞர் இதேபோல் ஓர் உதாரணத்தைக் கூறி இருக்கிறார். "பசிபாலே துடிக்கின்ற ஏழைக்கு ரொட்டித் துண்டு கடவுளாகத் தெரியும்" என்று.

(பாடசாலை வகுப்பறையில் பாடம் நடத்திக்கொண்டிருந்த ஆசிரியர் மாணவன் ஒருவன் நித்திரை செய்வதைக் கண்டார்.)

ஆசிரியர் :- உன் பக்கத்தில தூங்குறவனை எழுப்பிவிடு

மாணவன் :- நீங்க தூங்க வைப்பீங்கள். எழுப்புறது நானா... நீங்களே எழுப்புங்கோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித மாக உதாரனும் - தன்
தின்குரலால் வெண் ணிலாவையே
திவ்விய வர்ணனை பாடவே - செவி
தேக்கிய கள்ளக் கருங்குயில்,
"இவ்வித நுவல் கவி வல்லவன் - விழி
அற்றவனாயின் நிலாவினை
எவ்விதம் பார்த்தனன், பாடினன்? - இதில்
ஏதுங்கள் உண்டெ" ன ஓடியே

சாதுரியச் சொல் உதாரனை அவள்
தாமரைக் கண்ணொடும் கண்டனள்!
ஒதுமலைக் குலம்போலவோ அவன் - அவன்
ஓங்கிய தோள்களைக் கண்டனள்
"ஏதிது போன்றஆ ராணழில் - குறை
இன்றித் திருந்திய சிற்பிரம்?
சோதி நிலவுக்கும் மாசுண்டாம் - இச்
சுந்தரனோ கறை ஒன்றிலான்!

என்று வியப்புடன் நின்றனள் அந்த
ஏந்திழை தன்னெதிர் நின்றதைத்
தன்னிக ரற்ற உதாரனும்
தன்னை மறந்த வனாகியே
"என்ன வியப்பது! வானிலே - இருந்
திட்டதோர் மாமதி மங்கையாய்
என்னெதிரே வந்து வாய்ந்ததோ புவிக்
கேகிறு போலொரு தண்ணொளி!

மின்னற் குலத்தில் விளைந்ததோ? வான்
வில்லின் குலத்திற் பிறந்ததோ?
கன்னற் றமிழ்க்கவி வாணரின் - உளக்
கற்பனையே உருப் பெற்றதோ?
பொன்னின் உருக்கிற பொலிந்ததோ? ஒரு
பூங்கொடியோ? மலர்க் கூட்டமோ?
என்று நினைத்த உதாரன்தான் - "நீ





யார்?" என்று ஓர் உரை போக்கினான்.

"அமுதவல்லி யன்றோ!" என்றாள் - அந்த
அமைச்சனும் முடிவேந்தனும்
நமைப் பிரித்திடும் எண்ணத்தால் - உலக
நாட்டம் இல்லாதவன் என்றனர்!
சமூசயப்பட நீ இன்று மதி
தரிசன மதைப் பாடினாய்!
கமலங்கள் எனும் கண்ணுடன் - உனைக்
காணப் பெற்றதென் கண்" என்றாள்.

இவ்வாறாக புலவன் உதாரன் தனது இனிமையான குரலினால் சிறந்த வர்ணனையைப் பாடினான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அழகிய குயில் போன்ற குரலை உடைய அமுதவல்லி அதிர்ச்சியடைந்து விட்டாள். இவன் குருடனாக இருந்திருந்தால் பூரண சந்திரனை எப்படிப் பார்த்திருக்க முடியும். எப்படி குளிர் நிலவை வர்ணித்திருக்க முடியும். உண்மையிலேயே இதற்குள் ஏதோ சூது இருக்கின்றது. என்று நினைத்துக்கொண்டு உதாரன் இருக்குமிடத்தை நோக்கி ஓடிச்சென்று பார்த்தாள்.

அவன் தாமரைக் கண்களைக் கண்டு அசந்துவிட்டாள். மலைபோன்ற அவனது தோள்களைப் பார்த்தாள். ஒரு குறையும் இல்லாத எழில் ஓவியம் போல் காட்சியளித்தான். இப்படி ஓர் வரன் இருக்கிறதா? நிலவிற்கு கூட களங்கத்தைப் பார்க்க முடியும் ஆனால் இவரோ களங்கமில்லா அழகினர். என்று நினைத்துக் கொண்டு உதாரனைப் பார்த்தாள், தனக்கு நிகரே இல்லாத அந்த அழகிய ராஜ குமாரி அமுதவல்லி. அந்த உதாரன் தன்னை மறந்தவனாகி "என்ன ஆச்சரியம். வானத்திலே ஒளிவிட்டுக் கொண்டிருந்த மாமதி எனக்கு எதிரில் ஒரு மங்கையாக வந்து நின்றதோ? இந்தப் புவிக்கு இது போல குளிர்ந்த ஒளி எப்படி வந்தது? மின்னல் ஒளியில் தோன்றியவளோ?, பல வர்ணங்கள் அடங்கிய வானவில்லில் பிறந்ததோ?, கரும்பு போன்ற தமிழ் பேசுகின்ற கவிவாணர்களுடைய உள்ளத்தில் தோன்றுகின்ற கற்பனைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பெண்ணுருவெடுத்து என் முன் நிற்கின்றதோ?, பொன்னின் உருக்கிற் பொலிந்ததோ?. பூங்கொடியோ?, மலர்க்கொடியோ? என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்த உதாரன் தன் முன் நின்ற அமுதவல்லியைப் பார்த்து "நீ யார்?" என்று கேட்டான்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Treasure Hunt



"Jack! What in the world you are doing? Are you ill?" called an anxious voice and his mother's head peeped through the door.

"No, mother I'm alright, I am just tidying my room" said Jack. Then Jack asked his mother. Could you let me have some of those chocolate biscuits out of the tin mother? We're having our meeting tomorrow.

"Very well, Take only four" said his mother.

"Five you mean" called Jack, as she went out of the room. "Mother! five, I want, you have forgotten Roy, our dog". "Good gracious, well, you must waste good chocolate biscuits on a dog, take only five" said the mother.

"Good, thought Jack; we all have to take something nice to eat tomorrow" said his friend Jerick.

Next day, when all of them met together, one of them called Jill said, "I have an exciting plan, I have



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



found a note book on my way by the side of a police van, I am sure, a thief has thrown it away".

Peter was so excited and cried aloud, "what is written in the note book" Jill said. "Don't sought, nobody should know about it. Somebody has written about a treasure store; with a map showing the route to reach that place. But it seems to be very difficult and dangerous too". Then Jack said, "Okay we will all join together and make a successful effort"

Then Jill said, "It is not as easy as you think. It is a dangerous spot, far away in the thick forest". The note says that there are three big trees and there is a big hole in the middle one, if we go through that hole we can reach a treasure store. All of them were very happy and they decided to go there after two days, since they thought that they should go and investigate the place first. Jerick was listening to them very carefully. A sudden thought flashed in his mind that he could go alone to take the whole lot without the knowledge of his friends and become a rich man. The evil thought began to work in his mind. The next day, he got up early in the morning and went all alone without any previous preparation.

According to the arrangement all the friends except Jerick assembled at their particular place. The left a note to Jerick to follow them and proceeded with their plan. Since they knew the difficulties they are going to endure in their effort, they took plenty of water, short eats, sword, axe, guns and knives with them.

When the approached the forest Alas! a dreadful sight!! The dead body of Jerick lying under the tree". Bitten by a poisonous snake!! They all realised that there is a poisonous snake in the treasure hole.

They jointly searched, the snake in the treasure hole and killed it. Then they entered into the hole and took the treasure. Then Jill said; "Unity is strength, we have succeeded because, we have been united. Poor Jerick had made a great mistake".

Then Jack said; "what a pity, we have lost a good friend"

"No, Jack, he is not a friend, but a foe..." said Jill.

"Why do you say so, what is the definition of a good friend?" asked Jack.

Jill answered; "A good friend, is always trustworthy, honest and sincere ...; A friend in need is a friend indeed". He further added that Jerick was not honest or sincere, he was too selfish and awarishious and he had been punished for being dishonest. Jack said; "all of us will be true friends here after".

This is a very good lesson for us. Then Jill asked them to take a vow on the dead-body of Jerick that they would b e honest and sincere to each other forever. All of them took the vow on the dead body of Jerick and departed with the firm deremination, that they would be honest and sincere always even in adverse situation.

Then they all agreed that a dead body should be respected and they made arrangement to remove the dead body.

**Honesty is the best policy**

Ms. Jegasothy Chellappah

## Riddle

To cross the water I'm the way,
For water I'm above;
I touch it not, and truth to say,
I neither swim nor move. What am I?




A Bridge





# நேர்த்தியாய் எழுதுவோம்



## போட்டி இல. 08

## ஒருவருட சந்தாவை வெல்லுங்கள்

அணுகுண்டானது அணுக்கரு பிளவு முறையிலோ அல்லது அணுக்கரு பிணைவு முறையிலோ உருவாக்கப்படும் பாரிய அழிவு தரும் வெடிப்பாயுதங்களாகும். ஏனைய வெடிமருந்துகளுடன் ஒப்பிடும் போது பல்லாயிரம் மடங்கு அளிவாற்றல் கொண்டதாகத் திகள்கின்றன. முதன் முறையாக அமரிக்காவில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்த அறிவியலாளர்களாலும், இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளின் கூட்டு முயற்சியாலும் இரண்டாம் உலகப் போரின் போது என்ற பெயரில் நடந்த இரகசிய ஆராட்சிகளின் விளைவாக உருவாக்கப்பட்டது. இது யேர்மனியர்களுடன் அமரிக்காவிற்கு ஏற்பட்ட கடும் ஆயுதப் போரின் விளைவாக உருவாக்கப்பட்டது.

அணு ஆயுதப்படைப்புக்கு அம்பது ஆண்டுகளாக நேரிடையாகவோ அன்றி மறைமுகமாகவோ வழிவகுத்தவர்கள் முக்கியமாக ஐந்து விஞ்ஞான மேதைகள், முதலில் கதிரியக்கம் கண்டுபிடித்த மேரி கியூரி அடுத்து செயற்கைக் கதிரியக்கம் உண்டாக்கிய அவரது புதல்வி ஜரீன் கியூரி அதன் பின் அணுவைப் பிளந்து முதல் தொடரியக்கம் புரிந்த என்ரிகோ இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லர் தயாரிக்கும் முன்னே அமரிக்க ஜனாதிபதியை அணு ஆயுதம் ஆக்கத் தூண்டிய ஆல்பர்ட்ட ஐன்ஸ்டைன் முடிவில் போர் முடியும் தறுவாயில் பன்னாட்டு விஞ்ஞானிகளைப் பணி செய்ய வைத்து வெற்றிகரமாய் அணுகுண்டை உருவாக்கிச் சோதனை செய்த ராப்ரட் ஓப்பன்ஹைமர் ஆகியோராவர்.

ஜப்பான் ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டுகள் விழுந்து கோர விளைவுகள் நிகழ்ந்த பின் உலகின் வல்லரசுகளும், மெல்லரசுகளும் உடனே அணு ஆயுதங்களை இரகசியமாய் உற்பத்தி செய்ய முற்பட்டது. 1945 இல் அமெரிக்கா ஆக்கியதை ஒற்று மூலம் பிரதி அடித்து 1949 இல் ரஷ்யா தனது முதல் அணுகுண்டைச் சோதித்தது.

*மாணவர்களே! மேலே தரப்பட்டுள்ள பத்தி எழுத்துப் பிழைகளையோ அல்லது இலக்கணப் பிழைகளையோ கொண்டவை. இவற்றைத் திருத்தி எழுதி, மறுபக்கத்தில் உள்ள நறுக்கினையும் பூரணப்படுத்தி எமது முகவரிக்கு 10.09.2010 இற்கிடையில் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதி அனுப்பும் அதிஷ்டசாலி மாணவருக்கு பரிசாக (ஒருவருட சந்தா) 12 வரை மாசிகைகள் அனுப்பிவைக்கப்படும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நேர்த்தியாய் எழுதுவோம்" போட்டி இல. - 6 இற்கான பரிசைப்பெறும் அதிஷ்டசாலி மாணவி செல்வி. இ. மதுஷா, யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை.

## நேர்த்தியாய் எழுதுவோம் போட்டி இல.06 இற்கான நேர்த்தியாய் எழுதிய வடிவம்

*ஆண்டோனியோ என்பவர் செய்த இசைக்கருவிகள் உலகத்தையே வியக்கவைத்தன. 1644க்கும் 1737 க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இவர் தனக்கே உரிய சிறப்புகளோடு உருவாக்கிய வயலின்கள் அற்புதம். அதை எப்படி உருவாக்கினார்? என்ன கணக்கு வைத்திருந்தார்? என்பதெல்லாம் அவர் வெளிப்படுத்தியிருக்காத மாபெரும் இரகசியம். இவருடைய இசைக் கருவியிலிருந்து ஒரு நூலிழை மாற்றத்தை ஏற்படுத்தினால் கூட அபஸ்வரமாகிவிடும். அந்தளவுக்கு அவருடைய வயலின் உருவாக்கும் நேர்த்தி இருந்தது. இவருடைய வயலினிலிருந்து தெய்வீக இசை கசியும் என உருகுகின்றனர் இசை ரசிகர்கள். உலகின் பல இசை மேதைகளுடைய இறுதி ஆசையே ஒரு முறையேனும் இவருடைய இசைக்கருவியில் இசைக்க வேண்டும் என்பதுதான். இன்றுவரையில் முதல்தர வயலின் இவருடையதுதான். இவருடைய வயலினிலிருந்து எப்படி இந்த அற்புதமான இசை வருகிறது என்று நிபுணர்கள் ஆராயத்தொடங்கி சில நூறு ஆண்டுகளாகின்றன. உலகெங்கும் பல்வேறு அருங்காட்சியகங்களில் இவருடைய இசைக் கருவிகள் இருக்கின்றன பலருடைய தலையையும் பிக்கவைக்கும் இரகசியங்களைச் சுமந்தபடி.*

---

**நேர்த்தியாய் எழுதுவோம் போட்டி இல. 08**



முழுப்பெயர் : ..................................................

முகவரி : ..................................................

..................................................

..................................................

பாடசாலை : ..................................................

..................................................





## Proverbs and their meanings:

- Kill the goose that lays golden egg.
  Destroy something that would be a source of prosperity.
- Kindness begets kindness.
  If you are kind to people they will be kind to you.
- Learn to walk before you run.
  Don't rust into doing something until you know how to do it.
- Learning is a treasure that will follow its owner.
  Education is something you keep forever.
- Least said soonest mended.
  The more discreet you are, the less damage you cause.
- Let bygones be bygones.
  Let's forgive and forget past quarrels.
- Liars need good memories.
  Person tells lies should remember what things he lied.
- Lightening never strikes in the same place twice.
  Unusual event is not likely to occur again in exactly the same circumstances.
- Loose lips sink ships.
  Disclosing important information (to opponents) could result in large losses.
- Man proposes, God disposes.
  Our destiny depends on God's will.
- Manners make the man.
  Possibly: a person's manners show his origins.
- Many hands make light work.
  Sharing work makes work easier.
- Money is the root of all evils.
  Money is the main cause of wrongdoing and problems.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LET'S LEARN TO SPEAK IN ENGLISH

## ஆங்கிலத்தில் பேசப் பழகுவோம் தொடர். 4



மாதமொரு உரையாடல்

## A Monthly Conversation

By: Professor A.V. Manivasagar, Ph.D.
Head/Dept. of Political Science
University of Jaffna

Series. 4

## FATHER AND DAUGHTER

**This is a dialogue between a father and his daughter. The daughter asks her father to take her to the children's park as promised by him earlier.**

**Daughter:** Good morning Papa.

**Father:** Good morning my child.

**Daughter:** Papa, today is Sunday. You promised to take us to the children's park today. When are we going there?

**Father:** I have a lot of work to do today. Baby, can we postpone it to next Sunday?

**Daughter:** No, dear Papa. We must go today. I have also invited my two friends to accompany us.

**Father:** At what time have you invited your friend?

**Daughter:** They will be coming at 11 A.M. I promised them that we would be going at 11.30 A.M. sharp in our car to children's park.

**Father:** All right my lovely child. I shall try to finish my work by 11.A.M. so as to leave for children's park at exact 11.30 A.M.

**Daughter:** Thank you very much. Dear Papa, you are always so nice.

**Father:** Have you spoken to your *Amma* (Mummy) regarding today's programme?

**Daughter:** Yes Papa.

**Father:** What did she say?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Daughter:** She has agreed to go with us?

**Father:** But, who will prepare our lunch?

**Daughter:** Papa, we are taking dry lunch packets to children's park. We are also taking soda, biscuits, some fruits etc.

**Father:** Very good. You are very clever.

**Daughter:** But Papa, what about your car?

**Father:** Don't worry baby. I got it repaired and checked up at the workshop yesterday.

**Daughter:** That's very fine Papa.

**Father:** Have you asked your brother also to accompany us or not?

**Daughter:** No Papa. I simply forgot to ask him.

**Father:** O.K. Now remember to invite him also before leaving for children's park.

**Daughter:** Certainly Papa.

**Father:** Can you ask your brother to bring the things from the market which you want to take with us to the park.


**Daughter:** Yes Papa. I shall do it. Don't worry for that.

**Father:** Also ask your brother to bring his new Japanese camera.

**Daughter:** Yes Papa. He is not to be seen here. I shall tell him to do so.

**Father:** O.k. Baby, now go to the kitchen and help your mother in preparing the lunch.

**Daughter:** Thank you. Papa, I am just going.



***

# பல பயன் தரு(ம்) மரங்கள்




பல்பயன் தரு(ம்) மரங்கள் வரிசையிலே முதன்மையானவற்றுள் புளியும் ஒன்று. அறு சுவைகளுள், ஒரு சுவைக்கு சொந்தக்காரர் இது. பல பயன்களைத் தருகின்ற மரமாக உருவெடுத்துள்ளதனை அதனது ஒவ்வொரு பயன்களைப் பற்றியும் விரிவாக அறியும் போது தெரியவரும். எமது உணவுகளின் தயாரிப்பிலும் இதனது பங்களிப்பு விசேடமானது. சிலேடையாக "உப்புப்புளியில்லாத பண்டம் குப்பையிலே" என்னும் போது உப்பினதும் புளியினதும் முக்கியத்துவம் புலப்படும். இவையிரண்டும் இல்லாமல் எப்படியொரு உணவு இருந்தாலும் அதனால் பிரயோசனமில்லை என்பதாகும். இன்னொரு பக்கத்தில் புளிப்புத்தன்மையை உடைய புளியோதரை எனப்படும் உணவு மொத்தத்தில் புளிப்புத்தன்மையை முன்னிலைப்படுத்தி இருப்பதனையும் கவனத்திற் கொள்ள தவறக் கூடாது.


**கலாநிதி கு.மிகுந்தன்.**
**தலைவர்,**
**விவசாய உயிரியல் துறை,**
**விவசாயபீடம்,**
**யாழ். பல்கலைக் கழகம்.**


### புளி வீராப்பு கொண்ட மரம்

எந்த மண்ணில் வளரினும் வீரியங்கொண்டு நிமிர்ந்தெழுந்து நிற்கும் மரங்கள் வரிசையில் இதற்கும் இடமுண்டு. இதனது வீராப்பிற்கு நியாயமுண்டு. நிஷாப்புயல், வெள்ளம், வரட்சி, சுழன்றடிக்கும் சூறாவளி இப்படிப் பலவாறான இயற்கை அனர்த்தங்களை தாங்கி வளரும் மரமென்பதாலே இது காரணப் பெயராகியிருக்கிறது. புளிய மரத்தினுடைய அமைப்பு அப்படி. கட்டாந்தரையென்றாலும் அதிலொரு புளிய மரத்தை காணலாம். ஏனைய மரங்களைப் போலல்லாது இம் மரத்தினுடைய பயன்பாடு பல்வகைத் தன்மை கொண்டது. ஆனால் இம் மரத்தைப் பற்றி எமக்குத் தெரிந்தவை சில தான். உலகநாடுகளிலே புளியின் பயன்பாட்டை பட்டியலிட்டால் எமக்கு ஆச்சரியமே மேலிடும். இந்த ஆச்சரியத்தின் நுழைவாயிலுக்குள் நுழைந்து பார்ப்போம். வாருங்கள்! ஆச்சரியத்தின் பொக்கிஷத்தை ஆராய்ந்து பார்த்திடுவோம். புளியின் பெருமை கொஞ்சநஞ்சமல்ல. வரட்சியின் நாயகன், தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்கும் மாண்பு இதற்குமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பூர்வீகம்

புளிய மரத்தினுடைய பூர்வீகம் கிழக்கு ஆபிரிக்கா மற்றும் மேற்கு ஆசியா என அறிய முடிகின்றது. ஆனால் இம் மரம் பரந்துபட்ட அளவில் ஆசியா மற்றும் ஆபிரிக்கா பிரதேசங்களில் காணப்படுகின்றது. கடற்கரைப் பிரதேசங்களில் மணற்பாங்கான மண்ணில் வளரக் கூடியது. வரட்சியான



காலநிலையின்போது இலைகளை உதிர்த்து பின்னர் புதிய இலைகளை உருவாக்கும் போது அழகான பூக்களையும் உருவாக்கும். புளி(ய) மரத்தினது வளர்ச்சிக்கு பருவ மழை மூலமான மழைவீழ்ச்சி தேவை என்பதால் இது மழைமூலமாக கிடைக்கும் நீரில் வாழும் தன்மையுடையது. இலங்கையில் 2/3 பகுதி வரண்ட வலயமாக (Dry zone) இருப்பதனால் இப்பகுதிகளில் சிறப்பாக வளரக்கூடியதாக இம்மரம் இருக்கின்றது. மலைநாட்டுப் பிரதேசத்திலும் கூட புளி(ய) மரத்தைக் காணக்கூடியதாக உள்ளது. அரேபியர்கள் இம்மரத்தை இந்தியாவின் பேரீந்து (ராமர் என இந்தியில்) எனஅழைப்பர். அவர்களின் இந்திய மொழியிலான ராமர் மருவி(tamar) இம் மரத்தினை(Tamarind) என அழைக்கின்றனர்.இந்தியாவிலும் அசாம் மரம் என அழைக்கின்றார்கள்

### தாவரவியலாளரின் பக்கத்தில்

புளி(ய) மரத்தை ராமரின்டசு இன்டிக்கா *(Tamarindus indica)* என இருசொற்பெயர் கொண்டழைப்பர். ஆங்கிலத்தில் ராமரின்ட் மரம் எனவும், பிரென்சுவில் Tamarine - ஸ்பானிஸில் Tamarindeiro எனவும் போர்த்துக்கீசு வில் Tamarinda, judao எனவும் டச்சுவில் Tamarijin ஆகவும் ஜேர்மனியில் Tamarinde, Tamarindenbaum எனவும் சீன மொழியில் Tsao-kiao என்றும் பிலிப்பைன்சுவில் Sampalok எனவும் பல மொழி கொண்டு அழைக்கும் பேறு பெற்றிருக்கின்றது இம் மரம்.

புளி(ய)மரம் சிசல்பீனியேசியே (caesalpiniaceae) தாவர குடும்பத்தின் உறுப்பினர் ஆகும். இதனை தவறாக தபேசியே குடும்ப உறுப்பினராகவும் சிலர்

கருதுவதுண்டு. பெரிய மரமாக தானும் வளர்ந்து எம்மையும் வாழவைக்கும் மரம் இது என்றால் மிகையாகாது. இலையுதிர்ந்து புதிய இலைகளை உருவாக்கிடினும் என்றும் பச்சையாயிருக்கும் மரங்களில் ஒன்றாகியிருக்கின்றது. இதனது இலைகள் 3.5 - 15 செ.மீ நீளமானவை. சிற்றிலைகள் 10 -20 எதிரெதிராக இருக்கும். சிற்றிலைகள் 1.2 - 1.8 செ.மீ நீளமானவை, 3.75 செ. மீ அகலமானவை. நீள்வட்ட வடிவமானவை. மேல்நோக்கி வளர்ந்து செல்லும் பூந்துணரைக் கொண்டது. ஒரு பூந்துணரில் சராசரியாக 10 - 15 மெல்லிய மஞ்சள் நிற பூக்கள் இருக்கும். பூந்துணர்காம்பு 8 - 10 செ.மீ நீளமானது. புல்லி வட்டத்தின் விட்டம் 1.2 செ.மீ நீளமானது. 1 - 3 அல்லிகளைக் கொண்ட மெல்லிய மஞ்சளில் சிவப்பு நரம்புகள் இருக்கும். அழகான பூவுக்கு சொந்தக்காரர். காய்கள் ஒவ்வொன்றும் 7.5  20 செ. மீ நீளமும் 2 - 2.5 செ.மீ அகலமுமுடையவை. விதைகள் கடும் மண்ணிறம் அல்லது கறுப்புநிறமானவை.

புளி(ய) மரத்தினது இலை, பூ, மரப்பட்டை, பழத்திலுள்ள சதையம் மற்றும் விதைகள் என அனைத்துமே நிறைந்த பயனுள்ளதாக இருப்பது இதனது இன்னொரு சிறப்பு.

**புளியம் பழத்தினது சதையத்தில் உள்ளடங்கியவை பல**

புளி(ய) மரத்தினது பழங்களிலுள்ள சதையப்பகுதி அதிக பயன்பாடுடையபது. இதில் உள்ளடங்கியவை பல. ராராறிக் அமிலம்(3-10% ) அசெற்றிக் அமிலம், சிற்றிக் அமிலம், போமிக் அமிலம், மலிக் அமிலம், சக்சீனிக் அமிலம் இவற்றுடன் அலனின், லியூசின், பீனைனனலின், புரோலின், மற்றும் செரைன் ஆகிய அமினே அமிலங்களும், வெல்லம்(25-30%), பெக்ரின், புரதம்(87./கிலோன கிராமுக்கு), இவற்றைவிட இன்னும் பலவும் உள்ளடங்கியிருக்கும் அதிசயமான அபூர்வப் பழம் இது.

**இலைகளில்...**

புளி(ய) மரத்தினது இலைகளில் லுபனோன் மற்றும் லுபியோல் ஆகிய இரு ரைற்றபீன்கள்(triterpenes) காணப்படுகின்றன. இவ் இலைகளை சுனாமியின் போது கரையோரப் பகுதியினுள் உள்வாங்கிய கடல் நீரினால் உவர்த்தன்மை பெற்ற விளைநிலங்களில் உவர்த்தன்மையை ஈடுசெய்ய பயன்படுத்துகின்றார்கள். இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கு இயற்கையே மரமாகி மருந்தாகியிருக்கின்றதன் விந்தையைப் பாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**புளி(ய) மரத்தின் பயன்பாடுகள்**

இம் மரத்தினை சாலையோரங்களில் நடுகை செய்வதற்கு (Avenue Planting) விரும்புவர். பொதுவாகவே பராமரிப்பு குறைவாக தேவைப்படும் இம்மரத்தை நடுகை செய்து ஆரம்ப பராமரிப்பு மட்டும் செய்தாலே போதும். பின்னர் அதனை பெரிதாக கவனிக்கத் தேவையில்லை. பறவைகளுக்கும் விலங்குகளுக்கும் ஒரு சிறிய சரணாலயமாக இம்மரங்கள் திகழும்.

வழக்கத்திலிருந்து வரும் பயன்பாடுகளாக இதனது இளம் இலைகள் அல்லது துளிர்கள் சுவையான உணவு தயாரிக்கப் பயன்படுகின்றது. இம் மரத்தினுடைய கனி மற்றும் அதனுள் இருக்கும் சதைப்பகுதி (Pulp) ஜோர்தான் நாட்டில் (sous) சோயஸ் எனப்படும் மென்பானமாக பயன்படுகின்றது. இதைவிட பழங்குடி மக்கள் இக்கனிகளிலுள்ள புரதம் மற்றும் ஊட்டச்சத்துக்களை நம்பி உணவாக உட்கொள்கின்றார்கள். பச்சை இலைகள் சக்தி நிறைந்தனவாகவும், புரதச்சத்து மற்றும் தாதுப்பொருட்களை கொண்டிருப்பதுவும் விசேட அம்சமாகும். மேற்கு ஆபிரிக்கா, மாலி போன்ற பிரதேசங்களில் இம் மரத்தினது இலைகளையும் ஏனைய பெறுமதி வாய்ந்த பாகங்களையும் அன்றாட தேவைகளுக்கு பயன்படுத்துகின்றார்கள். நைஜீரியா நாட்டில் வட்டப்புழுவின் தொற்றுதலுக்கு மருந்தாக புளி(ய) மரத்தின் பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

எங்களூரில் புளியம்பழத்தினுடைய கோதினை அதாவது தோலினை நீக்கிவிட்டு சதைப்பகுதியை விதையுடன் சேர்த்து பொதியாக்கி விடுவர். ஆரம்பத்தில் மண்ணிற நிறமாக இருக்கும் இச் சதைப்பகுதி நாள் செல்லச் செல்ல கறுப்பு நிறமாக மாறிவிடுகின்றது. இதனை ஒரு குடிசைக் கைத்தொழிலாக



சுயவருமானமீட்டும் தொழிலாக செய்யலாம். இன்னும் இதிலே மாற்றமேற்பட்டு விதை தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு சதை(ய) ப் பகுதிக்கு உப்பிட்டு உடன் சமையலுக்கு பயன்படுத்தக்கூடிய

பண்டமாக மதிப்பேற்றம் செய்து (Value addition) விற்பனைக்கு விட்டிருக்கின்றார்கள்.

இன்னும் இச்சதை(ய)ப் பகுதியிக்கு இணையானளவு இனிப்பை சேர்த்து ஜாம் பொருட்களும் மற்றும் மென்பானங்களும் தயாரிக்கப்படுகின்றன.

**மருத்துவக் குணமுடைய சதை(ய) ப் பகுதி**

புளி(ய) மரத்தினுடைய பழத்திலுள்ள சதைப் பகுதி மருத்துவ குணமுடையதாக் வாழ்ந்து வரலாறாகி எமக்கு வழிகாட்டிகளாகும் சித்தர்கள் “கை கண்டது” என ஏட்டில் குறிப்பெழுதி வைத்திருக்கிறார்கள். இந்த சதைப்பகுதியை உப்புடன் சேர்த்து உருளைகளாக்கி, ஆவியில் அவித்து, வெய்யிலில் காயவைத்து, பின்பு இரவில் பனிப்பொழுதில் உறைய வைத்து இப்படியாக ஒரு கிழமைக்கு வைத்திருந்து பின்னர் மண்ணினாலான குடுவைகளுக்குள் சேமித்து அதனூடாக வடித்தெடுக்கும் எண்ணெய் போன்ற திரவத்தை மீண்டும் வெய்யிலில் வைத்து பெறப்படும் களிம்பு போன்ற திரவத்தை வாய்ப்பகுதியில் ஏற்படும் புண்கள் மற்றும் நோய்களுக்குப் பயன்படுத்துகின்றார்கள்.

ஆனால் இதையே எங்களூர் சிறுவர்களும் இளம் பெண்களும் இன்னும் தாய்மையடைந்திருக்கும் பெண்களும் விரும்பி உண்ணுவார்கள். பல இடங்களில் இலவசமாகக் கிடைக்கும் சத்தும் மருத்துவ குணமும் நிறைந்த பழங்களில் இதுவுமொன்று.

**புளியம்பழ விதைகளையும் உண்ணலாமே**

புளியம் பழ விதைகளை நெடுங்கோட்டில் இரண்டாக பாக்கு வெட்டியினால் வெட்டி தாயம் விளையாடுவார்கள். முதுகுப்புறம் கறுப்பாகவும் உட்புறம் வெள்ளையாயிருப்பதால் இநத வசதி புளி(ய) மர விதைகளின் தோலை அல்லது கோதினை அகற்றிவிட்டு அதனை நெருப்பில் சுட்டு அல்லது. வறுத்தெடுத்து இன்னும் நீரில் ஊறவிட்டு உண்ணுவார்கள். இன்னும் அதனை அவித்து மாபோல அரைத்தெடுத்தும் பயன்படுத்துவார்கள்.

இன்னும் புளி(ய) மரத்தின் பூக்கள், மற்றும் இலைகள் மரக்கறிவகையாகவும் பயன்படுகின்றன. புளி(ய) மரத்து விதைகளிலிருந்து பெறப்படும் மா பசைப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றது. இதைவிட புளி மென்பான பவுடர், புளி(ய) மர விதை எண்ணெய், ராராறிக் அமிலம், உணவுப்பொருட்களுக்கான நிறங்கள், புரதம் போன்றன வர்த்தகரீதியில் தொழில் தரும் பொருட்களாகவும் இருக்கின்றன.

புளி(ய) மர இலைகளிலிருந்து பெறப்படும் வடிகட்டிய இலைச்சாறு போன்ற பக்ரீறியா எதிர்ப்புடையனவாகவும், விதைகளிலிருந்து புரோட்டினேசு எனும் நொதியத்தை கட்டுப்படுத்ததும் பொருளையும் பாம்புக்கடிக்கான சிகிச்சைமக்கு பயன்படத்தவும் நீரிழிவு நோயைக் குணமாக்குவதற்கும் இன்னும் இரத்தத்தை சுத்தப்படுத்தவும் கொலஸ்திரோல் இனைக் கட்டுப்படுத்தும் வலிமையுள்ளதாகவும் இருக்கின்றன.

வெறுமனே எங்களூர் வெட்டைக் காணிகளில் கவனியாதிருக்கும் புளி(ய) மரத்திற்கு இவ்வளவு பெறுமதியா என வியக்கத்தோன்றுகிறதல்லவா! இது தானே இயற்கையின் விசித்திரமும்.

***

## பொது அறிவு

- சூழ்நிலை என்ற சொல்லை உருவாக்கிய விலங்கியல் வல்லுநர் யார்?
  **ரேய்ட்டர்**
- சூழ்நிலை என்ற சொல் யாரால் வரையறுக்கப்பட்டது?
  **ஹேக்கல்**
- உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்படும் தினம்?
  **ஜூன் 5**
- தபால் தலையில் முதலில் இடம்பெற்ற பெற்ற இந்தியர் யார்?
  **மகாத்மா காந்தி**
- சமூகவியல் என்ற சொல்லை தோற்றுவித்தவர்?
  **காம்டே**
- வறுமை ஒழிப்பிற்கான ஐ.நா விருது பெற்ற இந்தியர் யார்?
  **பாத்திமா பீவி**
- தமிழ் தாய் வாழ்த்து இடம்பெற்றுள்ள நூலின் பெயர்?
  **மனோன்மணீயம்**
- நோய்கள் பக்ரீரியா, வைரஸ் முலம் பரவுகின்றது என்பதை முதன் முதல் கண்டுபிடித்தவர்?
  **ஹிப்போகிரட்ஸ்**

செய் அல்லது செத்து மடி

*மகாத்மா*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக்ரட்டீஸ் (469 399)

கி.மு 5ம் நூற்றாண்டளவில் கிரேக்கம் ஒரு முன்னணிபீடத்தைப் பெறுகின்றது. பாரசீக யுத்தங்களில் பெற்ற வெற்றி காரணமாக ஏதென்ஸ் கலாசாரம் புத்துயிர்ப்பையும் அபிவிருத்தியையும் நோக்கி முன்னேறியதைக் காணமுடிகின்றது. ஏதேனிய நகரக் குடிமக்கள் இயற்கை அறிவு சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு ஏனைய மனிதரை ஆதிக்கம் செலுத்தும் கருவிகளையும் அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றுவதையும் முக்கிய செயற்பாடுகளாக்கினர். மனிதனை ஆராய்தல் என்ற ஆய்வுப்பொருள் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்கின்றது. சோபிஸ்ட்டுக்களின் ஆதிக்கமும் காணப்பட்டது. இக் காலகட்டத்தில் தான் சோக்ரட்டீஸ் ஏதென்ஸ் நகரில் பிறந்தார் இவர் கி.மு 470ல் பிறந்திருக்க வேண்டும். இவரின் தந்தை பெயர் சொப்ரோனிக்கஸ். சிற்பம் செதுக்குவதைத் தொழிலாகக் கொண்டவர். தாய் மகப்பேற்றுத் தாதி (Midwife)யாக பணியாற்றினார். தந்தையைப்போல் சோக்ரட்டீஸ் துணிவும், நேர்மையும் மிக்கவராக விளங்கினார். சோக்ரட்டீஸ் இன் கல்வி வரலாறு தெளிவானதாக இல்லை. ஆயினும் முன்னைய மெய்யியல் சிந்தனைகளின் அறிமுகம் அவருக்கு இருந்தது. சோக்ரட்டீஸ் இன் உருவத் தோற்றம் சற்று விநோதமானதாகவே இருந்தது. அவர் குள்ளமாகவும் பருத்த சரீரத்துடனும் இருந்தார். மூக்கு



தட்டையாகவும் பெரிதாகவும் இருந்தது. வயோதிபமானபோது தலை வழுக்கை விழுந்திருந்தது. அவர் பழையதையே எப்போதும் அணிந்தார். தனது தோற்றத்தை பற்றி அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. சோக்ரட்டீஸ் ஸன்ஸேன்த்திப்பியா என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார்.

சோக்ரட்டீஸுக்கு முந்திய முறைமைகளில் சோபிஸ்ட்டுக்களின் ஐயவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்கம் செயற்பட்டது. இது புரோட்டகோரஸ் (Protagoras) இன் சிந்தனைச் செல்வாக்கில் முதன்மை இடத்தைப் பெற்றிருந்தது. சோபிஸ்ட்டுக்களின் முக்கிய தலைவராக புரோட்டகோரஸ் விளங்கினார். இந்த சோபிஸ்டுக்கள் அறிவாளிகளாகவும் வாதத்திறமை உடையவர்களாகவும் காணப்பட்டனர். அறிவும் சிந்தனையும் சில சந்தர்ப்பங்களில் சமூகச் சூழலின் பிரதிபலிப்புகளாகவே உருவாக்கம் பெறுகின்றன. கிரேக்கத்தின் இக்காலப் பிரிவில் அறிவைப் பயன்படுத்தும் நோக்கு அதிகரித்தது. ஒழுக்கப் பிரச்சினை, மனிதன் பற்றிய சிந்தனை என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இக் காலகட்டத்தை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கலாம். சோபிஸ்ட்டுக்கள், சோக்ரட்டீஸ், பிந்திய சோக்ரட்டீஸ் சிந்தனைகள் என இது அமையும். சோபிஸ்டுக்கள் ஆன்மீகத்தில் அக்கறை கொள்ளவில்லை ஆனால் ஒழுக்க சீலர்களாக விளங்கினர். "ஒழுக்கத்தின் ஆசான்கள்" (Teachers of Virtue) என்று வர்ணிக்கப்பட்டனர். இவர்கள் கற்றவர்களாக இருந்தபடியால் பிரயோகச் செயல்திறனையும் உயர்ந்த மனவளத்தையும் யார் பெற்றுக் கொள்ள விரும்புகிறார்களோ அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு கல்வி வழங்கினார்கள். வாதிடும் கலையையும் படிப்பித்தனர்.

ஆனால் சோக்ரட்டீஸ் தமது மெய்யியல் ஞானத்தை ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு இலவசமாகக் கற்றுக்கொடுத்தார். இவர் தந்தையுடன் இணைந்து சிற்பத் தொழிலை செய்தபோதிலும் இளவயதிலேயே தனது தொழிலைக் கைவிட்டுவிட்டு தனது மெய்யியல் சிந்தனைகளின் ஆய்வில் இறங்கினார். இளைஞர்களுக்கு தனது மெய்யியல் சிந்தனையை புகட்டினார். இவருடைய இருபெரும் மாணவர்களான ஸெனோபன், பிளேட்டோ என்போர் இதற்குச் சான்று. இவர்கள் இருவரும் சோக்ரட்டீஸ் ஐப் பற்றி தொகுதி தொகுதியாக நூல்களை வெளியிட்டிருக்கின்றார்கள். இவரின் மெய்யியல் ஞானத்தால் இவர் ஏதென்சின் ஓர் சமூக சக்தியாக மாறினார். இவரின் வாதத்தில் இளைஞர்கள் அதிகம் கலந்து கொண்டனர். இதனால் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது.

சோக்ரட்டீஸ் அடிப்படையில் பிரயோகத்திற்குரிய நோக்கினையே தமது அனுபவமுறைகளின் மூலம் விருத்தி செய்தார். கோட்பாடுகளை விட அவர் நடைமுறையில்

நம்பிக்கை வைத்திருந்தார். மனிதன் பற்றி அல்லது மனித நடத்தை பற்றி அறிவதற்குரிய பொதுமையான பிரயோக ரீதியான முறை ஒன்றை உருவாக்குவது அவரது நோக்கமாக இருந்தது. சோக்ரட்டீஸின் போதனைகள் முக்கியமாக ஒழுக்கப்பண்புகளை அடிப்படையாகக் கொண்டவை. சோபிஸ்டுக்களுடன் சோக்ரட்டீஸ் ஐ ஒப்பிடக்கூடிய இடமாக இதனைக் கருதலாம். மனிதன்,



மனிதனின் கடமை, மனிதனின் பிரச்சினைகள் மெய்யியலில் பேசப்பட சோபிஸ்ட்டுக்கள் ஆரம்பகர்த்தாக்களாக இருந்ததைக் குறிப்பிடாதிருக்க முடியாது. எவ்வாறாயினும் சோக்ரட்டீஸ் இப்பிரச்சினைகளைக் கையாண்டதில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்தன. சோக்ரட்டீஸின் ஒழுக்கப் போதனைகள் அறிவாராட்சியியலுடன் இணைக்கப்பட்டிருந்தது. சோக்ரட்டீஸ் அறிவை பகுத்தறிவின் பாகமாக்கினார். பகுத்தறிவு நாக்கத்துடன் தொடர்புபட்டது. எல்லா அறிவும் எண்ணக்கருக்களால் அமைகின்றது என்ற அவரது கருத்தில் இந்த உண்மைகள் அடங்கி இருந்தன.

சோக்ரட்டீஸின் எழுபதாவது வயதில் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்காக அவர் எதென்ஸ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். அவர் மீது மூன்று குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. (I) தேசியக் கடவுள்களை நிராகரிக்கின்றார். (II) புதிய கடவுள்களை உருவாக்குகின்றார். (III) இளைஞர்களின் உள்ளத்தைக் கெடுக்கின்றார். இக் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவை. சோக்ரட்டீஸ் கடவுள் நிராகரிப்பாளர் அல்ல. ஜெனோபன் கூற்றுப்படி பல கடவுள்களை வணங்குவதையும் பிரபஞ்சத்தைப் படைத்து ஆளுகை செய்யும் ஓரே கடவுளை வணங்குவதையும் அவர் வேறுபடுத்திக் காட்டினார். தனக்குள் ஒலிக்கும் "ஒரு தெய்வீகக் குரலின் வழிகாட்டுதல்" தனக்கு இருப்பதாக அவர் கூறியதையே அவர் புதிய கடவுளை உருவாக்கினார் என்பதற்கு அவர்கள் கொண்டிருந்த கருத்தாகும். இளைஞர்களிடம் அவரது சிந்தனைகளுக்கிருந்த செல்வாக்கை அவர்கள் சோக்ரட்டீஸ் இளைஞர்களைக் கெடுப்பதாக தமது நோக்கில் வியாக்கியானப்படுத்திக் கொண்டனர்.

கி.மு 399 ல் அவர் கைது செய்யப்பட்டார். முப்பது வருடங்களுக்கு மேலாக அவர் மீது சில பிரிவினர் கொண்டிருந்த வெறுப்பின் ஆழம் அவரைக் குற்றவாளியாக்கியதிலும் அதற்கான நீதிமன்ற விசாரணைகளிலும் வெளிப்பட்டது. விசாரணை முடிவில் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை நிறைவேற்றுவதற்கு இருந்த இரண்டு மாத காலப்பகுதியில் அவர் சிறையில் இருந்து இலகுவாகத் தப்பிச் செல்லச் சந்தர்ப்பங்கள் இருந்தன. அவரது நண்பர்கள் அதற்காக உதவக் காத்திருந்தனர். அவர் அதற்கு இணங்கவில்லை. தவறான சட்டமாக இருந்தாலும் மரணத்தின் கதவுகள் திறக்கப்பட்டிருந்த போதும் சட்டத்திற்கு பணிவது தமது கடமை என்ற உறுதியில் இருந்து அவர் கடைசி வரை தளரவில்லை.

சமூக சிந்தனாவாதி சோக்ரட்டீஸ் தனது கடைசி நிமிடத்தில், சாகும் தருணத்தில் கூட சிறைச்சாலையில் அமர்ந்து கொண்டு நேரத்தை வீணாக்காமல் தனது நண்பர்களுடன் இறப்பு, ஆன்மா, வலி, இன்பம், துன்பம் போன்ற பகுத்தறியும் விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்ததாக பிளேட்டோ தனது ........ புத்தகத்தில் உணர்ச்சி பொங்க குறிப்பிடுகின்றார்.

விஷம் அருந்தும் சற்று நேரத்திற்கு முன், அவரைப் பிணைத்திருந்த சங்கிலிகள் அவிழ்க்கப்பட்டதால் தன் கால்களை தேய்த்துக் கொண்டு சற்று சவுகரியமாக மேடையில் அமர்ந்து கொண்டு ஆன்மாவிற்கு மரணம் உண்டா?, மறுபிறவி என்பது இருக்கிறதா? என்று தத்துவ விசாரணைகளில் தனது சீடர்களுடன் ஈடுபட்டாராம். அவரின் சிறை அதிகாரி அவரிடம் வந்து "என்னை மன்னித்து விடுங்கள் சோக்ரட்டீஸ், இந்த சிறைக்குள் நான் பார்த்த எத்தனையோ கைதிகளுள் நீங்கள் மிகச் சிறந்த மனிதர் என்பதை மட்டுமே என்னால் சொல்ல முடிகிறது. வேறு ஏதும் என்னால் சொல்ல முடியவில்லை, என்மீது உங்களுக்கு கோபம் இல்லையே? என்று கேட்க எழுந்து அவரிடம் சென்று அவரை அணைத்தவாறே சோக்ரட்டீஸ் என்ன கேட்டார் தெரியுமா? "எனக்கு விஷம் தயாராக இருக்கிறதா?" அவருடைய முதன்மை சீடர் கிரிட்டோ கண்ணில் நீர்வழிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமில்லை சோக்ரட்டீஸ், இன்னும் அஸ்தமனம் கூட ஆகவில்லை. சட்டப்படி நள்ளிரவு வரை நேரம் எடுத்துக் கொள்ளலாம்" என்றாராம் பதற்றமாக.

"நான் கடைசிவரை ஆர்வத்துடன் உயிரைப் பாதுகாத்துக் கொண்டதை வரலாறு பதிவு செய்ய வேண்டுமா கிரீட்டோ?" அது சற்று முட்டாள்தனமாகத் தோற்றமளிக்காதா?" என்று விட்டு உடனே விஷக் கோப்பையைக் கொண்டு வரச் சொன்னாராம். அது மட்டுமல்ல விஷத்தை அருந்திய சோக்ரட்டீஸ் "அது முறைப்படி வேலை செய்ய நான் ஏதாவது செய்ய வேண்டுமா?" என்று அதிகாரியிடம் கேட்டாராம். பின்னர் அதிகாரி சொன்னபடி விஷத்தை குடித்துவிட்டு கால்கள் மரத்துப் போகும்வரை சற்று முன்னும் பின்னும் நடந்துகொண்டிருக்க, அதுவரை சோகத்தை அடக்கிவைத்துக்கொண்டிருந்த சீடர்கள் "ஓ" வென்று கதற "என்ன இது? மரணத்தின் போது அமைதி நிலவுவது அழகாக இருக்குமே!" என்றாராம்.

ஒரு மெய்யியல் சிந்தனாவாதியின் இறப்பை அவரது சீடர்கள் அவர் பரகதி அடைந்தார் என்றோ இறைவனடி சேர்ந்தார் என்றோ சொல்லாமல் "சோக்ரட்டீஸ் இன்று முதல் சிந்திப்பதை நிறுத்திவிட்டார்" என்று அறிவித்தனர்.

உசாத்துணை

1. கிரேக்க மெய்யியல் முதல் தற்காலம் வரை
   கலாநிதி எம். என். எம். அனஸ்
2. இணையம்

## அறிந்து கொள்வோம்


- தண்ணீருக்கு அடியில் சென்று ஆராட்சி செய்ய உதவும் மூச்சு கருவியின் பெயர் ஸ்கியூபா(SCUBA Self Contained Underwater Breathing Apparatus) ஆகும்.
- தொலைக்காட்சியில் பயன்படுத்தப்படும் மூன்று அடிப்படை நிறங்கள் பச்சை, நீலம், சிவப்பு
- கணினியின் வேகம் வினாடிக்கு Flops என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.
- பாம்பு நாக்கின் மூலம் வாசனையை உணர்கின்றது.
- காண்டா மிருகத்தின் மிருகத்தின் கொம்புகள் எலும்புகளால் ஆக்கப்பட்டவை அல்ல, மிகக் கடினமான மயிரிழைகளால் உருவானவை
- கடுமையான வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக்கொள்ள நீர் யானையின் தோலில் ஒருவித இளஞ்சிவப்பு நிறத்திலான திரவம் சுரந்து குளிர்ச்சியை கொடுக்கிறது.





# நான் கண்ட சாரங்கன்

ரதன்



சாரங்கன் என்ற அந்த நண்பனை பல்கலைக்கழகத்தில் நான் முதன்முதலில் சந்தித்தது தென்கிழக்கு பல்கலைக் கல்லூரியில் 1994-1995 காலப் பகுதியில். அப்பொழுது நான் அவனை ஒரு வெறும் சாதாரண மாணவனாக, முதல் வகுப்பு மாணவனாகச் சேர்ந்த காலம்...

நான் கிராமப்புற பாடசாலையிலிருந்து இடையில் மகாஜனாவில் சேர்ந்தவனே. என்னவோ ஒருவித தாழ்வு மனப்பான்மை... மகாஜனா என்றாலே ஒரு பிரமிப்பு. அந்த மகாஜனாவின் பிரமிப்புகளை ஒவ்வொன்றாகக் கேள்விப்பட்டு வியந்தபோது என்னை பெருமைப்படவைத்த பிரமிப்புக்கள் இந்த சாரங்கன்.


எல்லோருக்கும் மனதுக்குள் "இப்படி வரவேண்டும், அப்படி வரவேண்டும்" என்று கனவு இருக்கும். எனக்கு என்னவோ அப்படியொரு கனவு இல்லாவிட்டாலும், என்னைவிட ஒருவயது சிரேஷ்டனாக இருந்த "சாரங்கன் மாதிரி" இருக்க வேண்டும் என்று ஆசை எழும். அவனை மாதிரி எல்லாத் துறைகளிலும் பிரகாசிக்க வேண்டும் என்ற கனவு எங்கள் கல்லூரியில் எல்லோரையும் போலவே எனக்கும் இருக்கும். தனக்குக் கீழ் உள்ள வகுப்பு மாணவர்களுக்கு மட்டுமல்ல, மேல் வகுப்பு மாணவர்களுக்கும் ஹீரோவாக இருந்தான்.

அந்த நாளில் எமது கல்லூரி அதிபர் நாகராசா அவர்கள் தனது உரையில் அடிக்கடி உதாரணம் காட்டும் மாணவன் எமது கல்லூரியின் சாரங்கன்தான். அவனை மாணவனாகப் பெற்றது மகாஜனாவிற்குக் கிடைத்த பெருமை என்று பாராட்டுவார்.

சாரங்கன் என்னைவிட ஒரு வகுப்புக் குறைவு என்றாலும் அறிமுகம் அவனுடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு கிடைத்து குறைவாகவே இருந்தது. அவனோடு பழக வேண்டும், நண்பனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இருக்கவேண்டும் என்ற ஆசை அப்போது எனக்கு இருந்ததேயில்லை. மண்ணின் காலத்தின் கோலம், தமிழர் தலைவிதி... 1995ல் பாரிய இடப்பெயர்வு... செம்மணியினூடாக ஒரு கொடிய பயணம். பின் 1997ம் ஆண்டு வவுனியாவிலிருந்து மகாஜனாவில் இணைந்து கொண்டேன். இடப்பெயர்வால் ஒரு மாற்றம். அதாவது 1998இல் உயர்தர இறுதிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நான், 1999ம் ஆண்டு அணியினருடனேயே கற்கத் தொடங்கினேன். அதாவது சாரங்கனின் அணி.

அந்தக் காலப் பகுதியில்தான் சாரங்கன் என்ற ஜீவனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. நான் வர்த்தகப் பிரிவு. அவன் விஞ்ஞானப் பிரிவு. அவனுடன் பழகப் பழகத்தான் அவனின் பல்பரிமாணத் திறன்கள் எனக்குப் புரிந்தது. படிப்பு மட்டுமல்ல நடனம், கவிதை, கட்டுரை, பேச்சு, அதைவிட நிர்வாகத்திறன், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடாத்துவதில் என எல்லாத் துறைகளிலும் முன்னின்று செயற்படுவான். சாரங்கன் எங்கள் சிரேஷ்ட மாணவ தலைவனாக இருந்து என்னை வழிநடத்தியவன். அவனைப் பின்பற்றி, ஓரளவிற்கேனும் எனது நிர்வாகத் திறமையும் வளர்த்துக் கொண்டேன்.

நான் பல திறமைகொண்ட கெட்டிக்காரனென்ற அகங்காரமும் அவனிடத்தில் இருந்ததில்லை. யாருடனும் எளிமையாகப் பழகி மற்றவர்களின் திறமைகளைத் தட்டிக்கொடுப்பான். என் எந்தச் செயலுக்கும் ஊக்கம் தருவான். மற்றவர்களை முகம் சுழிக்கும் பழக்கம் அவனுக்கு இல்லை.

தனது தந்தையாரின் அன்பு வழிகாட்டலிலும், தாயார் பற்றுள்ள சிந்தனைகளின் பாசத்தில் வளர்ந்து சிறந்து விளங்கிய சாரங்கன் "இப்படியொரு பிள்ளை கிடைக்கமாட்டானா?" என்று உறவினர்களையும், "இப்படியொரு மாணவனுக்கல்லவா ஆசிரியராக இருக்கவேண்டும்" என்று பல ஆசிரியர்களையும் ஏங்கவைத்தவன். இத்தகைய மாணவன் மருத்துவபீட மாணவனாக தெரிவுசெய்யப்பட்ட போது பெற்றோர்கள் மட்டுமல்ல அனைவருமே பெருமைப்பட்டுக்கொண்டோம்.

சாரங்கன் ஒரு மிகச் சிறந்த கவிஞன். சிறிய வயதிலிருந்தே அவன் எழுதிய கவிதைகள் சகல முன்னணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகளில் இடம்பெற்றன. புகழ்பூத்த கவிஞர்கள் போலவே அவனது இயல்பும் இருந்தது. அவன் சுதந்திரப் பறவையாகவே இருக்கவிரும்பினான். எதையும் துணிந்து எழுதுவான். யாருக்கும் அவன் அஞ்சியதில்லை. அவனது உணர்வுகளும் ஒளிவு மறைவின்றி வெளிப்படையானதாகவே இருக்கும். அவனது மனக்கண்ணில் விரியும் காட்சிகள் நிஜத்துடன் பொருந்தவில்லை என்பதால் அவன் மனம் துன்பப்பட்டுக்கொண்டிருந்தது. தேசத்திற்குத் தேவையான ஆரோக்கியமான கருத்துக்கள் அவனது கவிதைகளில் இருக்கும்.

சிதைக்கப்பட்ட
தோழர்களுக்காய்

துணிவாய்த் தெரியும் வெளியில்
வெறுக்கப்பா'!

மனதுகளின் வேகமான
பிரயாணம்

இப்படி பல காத்திரமான வரிகளைத் தாங்கிய அவனது கவிதைகள் பிரசவித்திருந்தது.

அண்மைக் காலங்களிலெல்லாம் சாரங்கன் என்ற பெயர் உலகம் முழுவதும் தமிழ் இலக்கிய ஆர்வலர்களால் பேசப்பட்டது. சிறந்த இலக்கியவாதி ஒருசாரங்கன் உருவாகியிருக்கிறான் என்று பலரும் அவனது வளர்ச்சியை எதிர்பார்த்திருந்தனர்.

சாரங்கனுடன் கற்ற மருத்துவ பீட மாணவர்கள் "சாரங்கன் மருத்துவத்துறையை விருப்பத்துடன் தொடரவில்லை. அவனுக்கு இலக்கியத் துறையே பிரதானமாகவும் எப்போதும் இருந்தது. பல் கலைக் கழகத்திலும் தன் பல் துறை ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தான். இறுதி வருடத்தைப் பூர்த்திசெய்யாத நிலையில், இன்று எம்மைவிட்டு நீங்கிவிட்டான்" என்று கண்ணீருடன் சொல்கிறார்கள்.

இறுதி நாட்களில் சாரங்கன் நெருங்கிப் பழகிய நண்பர்களுள் நானும் ஒருவன். பல விடயங்களை என்னுடன் மனம்விட்டுப் பேசியிருந்தான். இருந்தும் சில பக்கங்களை அவன் பகிர்ந்துகொண்டதில்லை.


கவிஞனாக, மருத்துவனாக, அரசியல் அறிஞனாக பல வடிவங்களில் எல்லா விடயங்களையும் முழுமையாகத் தெரிந்திருந்த சாரங்கன் 20.08.2010 (வெள்ளிக்கிழமை) தன் வாழ்வை முடித்துக்கொண்டான். இருந்தும் 22.08.2010 (ஞாயிற்றுக்கிழமை) அன்றே அவன் இறந்த செய்தி பரவுகிறது. மனது இன்னமும் தவிக்கவைக்கிறது.

அவன் எழுதிய ஆயிரக்கணக்கான கவிதைகள் வெளியிடப்பட்டு, உலகெங்கும் உள்ள அனைத்து தமிழ் இலக்கிய ஆர்வலர்களின்தும் இதயங்களிலும் அவனுக்கென்று ஒரு சிம்மாசனம் ஏற்படவேண்டும்.

***

# நினைவக பரிசோதனை மென்பொருள்


நாம் பயன்படுத்தும் கணினியானது எந்த வகையில் எவ்வளவு நினைவகத்தினை பயன்படுத்துகிறது என அறிந்து கொள்வது கணினிப் பயன்பாட்டை வழிப்படுத்த நமக்கு உதவும். இப்போது நாம் பயன்படுத்தும் பிரயோக மென்பொருள்கள் இயங்குவதற்கு அதிகளவு நினைவகத்தினை பயன்படுத்துகிறது. எனவே நம் கணினியில் இயங்கும் செய்நிரல்களின் (running programs) எண்ணிக்கை அதிகரிக்கும் போது கணினியின் செயற்பாடு சற்று தடுமாறுகிறது. நாமும் தேவையற்ற செய்நிரல்களை இயங்கவைத்து கணினியின் செயல்பாட்டினை தாழ்ந்த நிலையில் இயங்க வைப்போம். இதற்கு தீர்வாக நினைவக பயன்பாட்டினை தொடர்ந்து காட்டப்படும் வசதி கணினிகளுக்கு இருந்தால் தேவையற்ற இயங்கும்





செய்நிரல்களை இயக்கத்தினை நிறுத்தி தேவைப்பட்ட செய்நிரல்களை இயக்கலாம். இச் செயற்பாட்டினை நிறைவேற்றக் கூடிய வகையில் இன்று இணையத்தில் கணினியின் நினைவகத்தினை கண்காணித்து ஒழுங்குமுறைப்படுத்தும் சில மென்பொருட்கள் இலவசமாக கிடைக்கின்றன. அவற்றினைப் பற்றி இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

**Mem Info:** மெம் இன்போ எனப்படும் இந்த மென்பொருளினை இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து இயக்கி வைத்து விட்டால் போதும் இது சிஸ்டம் ரேயில் இருந்து கொண்டு நினைவகம், மெமரி ஆகியவற்றின் செயற்பாட்டினை தொடர்ந்து கண்காணிக்கிறது. நினைவக பயன்பாட்டினை வரைபடம் மூலம் காட்டுகிறது. நினைவக பயன்பாடு அதிகமாகும் போது நம்மை எச்சரிக்கிறது. எந்த அளவில் எச்சரிக்கை செய்திட வேண்டும் என்பதனையும் இதில் நாம் ஒழுங்கமைத்துக் கொள்ளலாம். நினைவகத்தில் சிதறி உள்ள செய்நிரல் கோப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளும் வசதியினையும் இது கொண்டுள்ளது.



**Performance Monitor:** இந்த மென்பொருளானது நினைவக பயன்பாட்டினைச் சோதனையிடுவதுடன், சேமிப்பக தட்டுக்கள் மற்றும் வலையமைப்பு பயன்பாட்டினையும் சோதனையிடுகிறது. இதுவும் சிஸ்டம் ரேயில் இருந்து கொண்டு இயங்குகிறது. நினைவகம், சேமிப்பகம், வலையமைப்பு செயற்பாடு ஆகியவற்றின் செயற்பாட்டினை திரையின் மேற்புறத்தில் காட்டுகிறது.

**Free RAM XP Pro:** இம் மென்பொருளானது கூடுதல் வசதிகளை வழங்குகின்றது. நினைவகத்தின் பயன்பாட்டினை கண்காணிப்பதுடன் மட்டுமல்லாமல் நினைவகத்தின் வேகத்தினை அதிகப்படுத்துவதும் செய்கிறது. தானாகவே நினைவகத்தில் உள்ள தேவையற்ற செய்நிரல்களை அகற்றுகிறது. எந்த செய்நிரல்கள் எவ்வளவு நினைவகத்தினை பயன்படுத்துகிறது என காண்பிக்கிறது. நினைவகத்தினை சுருக்கி பயன்படுத்தும் தொழில்நுட்பத்தினையும் கொண்டுள்ளது. இதனை நாம் http://www.yourwaresolutions.com.software.html எனும் இணைய பக்கத்தில் பெறலாம்.


**Flash drive** இல் ஆபத்துக்கால முறைமை இயக்கி

வைரஸ்களை நீக்கும் அல்லது எதிர்த்து அழிக்கும் செய்நிரல்களை தயாரிந்து வழங்கும் நிறுவனங்கள் பல இலவச ஆபத்துக்கால முறைமை இயக்கி வட்டுக்களை (System boot disk) தருகின்றன. ஏதேனும் வைரஸ் பாதிப்பால் முறைமை இயங்குவது முடங்கிப் போனால் உடனே இந்த ஆபத்துக்கால மீட்பு வட்டுக்கள் மூலம் கணினியை இயக்கி உள்ளே இருக்கும் வைரஸ் மற்றும் அது சார்ந்த கோப்புக்களை அழித்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியை வழமைமையைப் போன்று இயங்கச் செய்யலாம். இப்போது முதல் முறையாக ஒரு பிளாஸ் இயக்கி (Drive) மூலம் இது போன்ற ஆபத்துக்கால பாதுகாப்பு பயன்பாட்டினை ஒரு வைரஸ் எதிர்ப்பு மென்பொருளினை உற்பத்தி செய்யும் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இந்த வகையில் பிரபலமான காஸ்பர்ஸ்கி (Kaspersky) நிறுவனம் அண்மையில் Kaspersky USB Rescue Disk Maker என்ற மென்பொருளினை வழங்குகின்றது. இந்த மென்பொருள் மூலம் வைரஸ் பாதிப்பால் கணினி பாதிப்படைந்து முடங்குகையில் கணினியை மீள இயங்க வைப்பதற்கு மூலமும் மீள் இயக்கி செய்நிரல்களை வைத்திருப்பதற்கு ஒரு பிளாஸ் இயக்கியினை உருவாக்கிக் கொள்ளலாம்.



kaspersky Rescue Disk 10 என அழைக்கப்படும் இந்த சாதனம் கணினியை ஸ்கேன் செய்து பாதிப்பை ஏற்படுத்திய வைரஸ் செய்நிரல்களை அழித்து கணினியை பழைய நிலைக்கு கொண்டு வருகின்றது. கணினியில் ஏற்கனவே நிறுவப்பட்டு இயங்கி வரும் வைரஸ் எதிர்ப்பு மென்பொருள்களினால் பாதிப்பை உருவாக்கிய வைரஸ் செய்நிரல்களை ஒன்றும் செய்திட முடியவில்லை என்ற நிலைக்கு வந்த பின்னரே இதனைப் பயன்படுத்த வேண்டும். இதன் விசேட சிறப்பம்சம் என்னவென்றால் இச் செய்நிரலினை ஒரு பிளாஸ் இயக்கியில் உருவாக்கிப் பயன்படுத்தலாம் என்பதேயாகும். இதனை எப்படி உருவாக்குவது என பார்ப்போம்.

1. அண்மையில் வெளிவந்த Kaspersky Rescue disk 10 ற்கான ஐ.எஸ்.ஓ செய்நிரல். இதனை http://rescuedisk.kaspersky-labs.com/rescuedisk/updatable எனும் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
2. KasperskyRescuediskmaker இதனை http://rescuedisk.kaspersky-labs.com/rescuedisk/updatable/rescue2usb.




exe என்ற இணையத் தளத்தில் இருந்து பெறலாம். இவற்றைக் கொண்டு நாம் பாதுகாப்பினை அமைக்க இருக்கும் யு.எஸ்.பி இயக்கி FAT16 அல்லது FAT32 கோவை கட்டமைப்பை கொண்டிருக்க வேண்டும். என்.டி.எவ்.எஸ் கோவைக் கட்டமைப்பினை கொண்டிருக்க கூடாது. இந்த இரண்டு மென்பொருள்களினையும் பதிவிறக்கம் செய்து மேலே கூறிய இரண்டு கோவை கட்டமைப்புக்களில் போமட் செய்யப்பட்ட, எந்த மென்கோவைகளும் பதிக்கப்படாத பிளாஸ் இயக்கி ஒன்றையும் தயார் நிலையில வைத்திருக்க வேண்டும். இனி எப்படி இந்த ஆபத்துக்கால பாதுகாப்பு யு.எஸ்.பி இயக்கியினை தயார் செய்வது என பார்ப்போம்.

1. முதலில் Kaspersky USB Rescue Disk Maker என்ற மென்பொருளினை கணினியில் நிறுவிக் கொள்ள வேண்டும்.
2. மென்பொருள் இடைமுகப்பில் காஸ்பர்ஸ்கி ரெஸ்கியூ டிஸ்க் உருவினை தேடிப் பெறுங்கள். பின்னர் இணைக்கப்பட்டுள்ள யு.எஸ்.பி இனையும் தேர்ந்தெடுங்கள்.
3. இந்த இயக்கியில் உள்ள பிளாஸ் இயக்கியினைத்தான் ஆபத்துக்கால பாதுகாப்பு வட்டாக உருவாக்கி பயன்படுத்த இருக்கின்றோம்.
4. ஸ்ராட் என்பதில் கிளிக் செய்த உடன் ஐ.எஸ்.ஓ உருவில் இருந்து தேவையான பைல்கள் யு.எஸ்.பி பிளாஸ் இயக்கிக்கு பிரதி செய்யப்படும். பிரதி செய்து முடிந்தவுடன் பிளாஸ் இயக்கி உங்கள் ஆபத்துக்கால நண்பனாக இருக்கும்.

இதனை ஒருமுறை இயக்கி சோதனை செய்து பார்த்து வைத்துக்கொள்வது நல்லது. இதனம் மூலம் கணினி இயங்குகின்றபடி செய்து இது நோக்கத்திற்கு ஏற்ற முறையில் செயற்படுகின்றதா என்பதனையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். இவ் ஆபத்துக்கால பாதுகாப்பு செய்நிரல்களினை இறுவட்டு காம்பெனி இறுவட்டு என்பவற்றிலும் பிரதி செய்து வைத்துக்கொள்ளலாம்.

திரு.கி.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதின் ஓசைகள்



### வருத்தம்

முழு உலகையும்
ஏதேன் தோட்டமாக
மாற்ற வல்ல என்
இதயத்தில் ஏவாள் மட்டும்
என்னுடன் இல்லை

### நினைவு

உன் மௌனங்கள்
புஷ்பித்து மலர்களாகும்
என்றிருந்து
மௌனங்களாகிப் போனதில்
மொத்தமாக உதிர்ந்து போனவன்

### தோல்வி

நீ
சலனங்களின்
அஸ்தமனமாகாதே
சந்தோசங்களின்
ஆரம்பமாகு
நான் அஸ்தமிக்கிறேன்
உனது வாழ்க்கைப் பாதையிலிருந்து

### விருப்பு

என் உள்ளங்கைகளில்
முகமேந்திக் கொள்ளும்
உன் வரவு
நிகழ்ந்தாக வேண்டும்
இனியேனும் இந்த
கவிதைகளால் என்னை
காப்பாற்ற முடியுமென்று
தோன்றவில்லை

### ஆற்றாமை

எனது மூளையின் மறக்கும் கலங்கள்
மரித்துப் போனபின்
மோனத்தவத்தை கலைக்க
உன்னை நோக்கிய
இனி எந்த வேண்டுகையால்
இயலும்

**வை. சாரங்கன்**





# புதிர்

போட்டி இல.09

**பரிசு ரூ. 500**

சோ. கிருஷ்ணதாஸ்

கீழ் உள்ள புதிர்களுக்கான விடைகளை 10-0[illegible]-2010 இற்குமுன் எமது முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். சரியான விடையனுப்பிய அதிஷ்டசாலி மாணவருக்கு ரூபா 500.00 வழங்கப்படும்.

1. உங்களிடம் 30 பவுண் நகை தரப்படுகிறது. அவற்றை 5 மோதிரங்களாகச் செய்து உங்கள் விரல்களில் அணிய வேண்டும். ஆனால் ஓர் நிபந்தனை எத்தனை பவுண்களைக் கேட்டாலும் அவற்றை மோதிரமாகவே கழற்றித் தரவேண்டும். எனின், ஐந்து விரல்களில் எத்தனை எத்தனை பவுண்களில் மோதிரங்களை அணிவீர்கள்.

2. அறையொன்றில் ஒரு மூலையில் சில எலிகள் உள்ளன. அவற்றின் மேல் ஒரு பூனை பாய்ந்து நான்கு எலிகளை மட்டும் பிடிக்கிறது. மீதி எலிகள் தப்பிச்சென்று மற்ற மூலைக்குச் சென்றதும் அவை இரு மடங்காகின்றன. அவற்றின் மீதும் பூனை பாய்ந்து 4 எலிகளைப் பிடிக்கின்றது. இவ்வாறு நிகழ்வு தொடர்ந்து அறையில் நான்காவது மூலையில் பூனை எல்லா எலிகளையும் பிடித்தது எனின் முதலாவது மூலையில் இருந்த எலிகளின் எண்ணிக்கை யாது?

3. உங்களிடம் 2 அடுப்புகள் தரப்படுகின்றன. ஒரு அடுப்பைப் பயன்படுத்தி 2 நிமிடங்களில் ஒரு தோசை சுட முடியும். ஆனால் 3 நிமிடங்களில் 3 தோசை சுடும் படி பணிக்கப்படுகிறீர்கள். எவ்வாறு எனக் கூறுக.

## இதழ் 6 இல் வெளிவந்த புதிர் போட்டிக்கான விடைகள்

1. i) 177-77=100
   ii) (7+7)x(7+(1/7))=100
2. ஒரு நாளுக்கு 2/3 முட்டை
3. பிறந்தது டிசெம்பர் 31
   கூறியது ஜனவரி 1இல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராமிய எழுத்துக்கள்

தென்னாசியாவின் ஆதி வரிவடிவமாகப் பிராமி வரிவடிவம் அமைகின்றது. பிரமனிலிருந்து இது உற்பத்தியானதால் இவ்வாறு பெயர் பெற்றதென்பதே வழக்கு. இப் பிராமி வரி வடிவம் இந்தியாவில் எவ்வாறு தோன்றியது? என்பது பற்றி

அறிஞர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. சிந்துவெளி நாகரீக வரிவடிவமே இப் பிராமி வரிவடிவத்திற்கு மூலமாக அமைந்தது என்ற கருத்தும் உண்டு. சிந்துவெளி நாகரீகத்தின் வீழ்ச்சிக்கும் (கி.மு 1500) பிராமி வரிவடிவத்தின் தோற்றத்துக்குமிடையே கிட்டத்தட்ட ஆயிரமாண்டு இடைவெளி காணப்படுகின்றன.

பொதுவாக இந்தியாவில் கி.மு 3ம் நூற்றாண்டிலேதான் பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்பட்டாலும் இதற்கு ஒரு சில நூற்றாண்டிற்கு முன்னரே குறைந்தது கி.மு 500ம் ஆண்டிலே மக்கள் இவ் வரிவடிவத்தை அறிந்திருக்கக்கூடிய சான்றுகள் உள்ளன. வட இந்தியாவில் அசோகச்சக்கரவர்த்தி காலத்திலேதான் பிராமி வரிவடிவம் கல்வெட்டு



வரிவடிவமாக பரந்த முறையில் வழக்கிருந்திருக்கிறது. "எரானில் கிடைத்த நாணயம்" "தக்கசீலத்திற் கிடைத்த நாணயம்" மகாஸ்தானில் கிடைத்த கல்வெட்டு" "பிப்ராவில் காணப்படும் குடுவையிற் கல்வெட்டு" ஆகியவை இதற்கான சான்றுகளாகும்.

பிராமி வரிவடிவம் பற்றி ஆராய்ந்த "பியூலர்" போன்றோர் அசோகச்சக்கரவர்த்தி காலத்திற்கு முன்னரே இவ் வரிவடிவம் காணப்பட்டதாக கூறினர். பொதுவாக மத்தியகிழக்குப் பிராந்தியத்திலிருந்தே இது இந்தியாவை அடைந்தது என்றும் இவ் எழுத்தின் தாய்மொழியாக






"செமிற்றிக் மொழியிலமைந்த பினீசியர்" வரிவடிவம் அமைந்தது என்றும் கருதப்படுகின்றது.

சிலர் தமிழக பிராமி வரிவடிவமும் பழைய திராவிட வரிவடிவத்தின் வளர்ச்சியே எனலாம் எனக் கூறுகின்றனர். சில வேளைகளில் பிராமிய எழுத்தானது காலப்போக்கில் வளர்ந்திருக்கலாம் அல்லது பிரிந்திருக்கலாம். இவ்வாறு பிரியும் போது இலக்கியச்சான்றுகள் கூறுவது போலப் 16/64 வரிவடிவமாகப் பிரிந்திருக்கலாம். கால வளையில் அசோகப் பிராமி வரிவடிவம் ஏனைய வரிவடிவங்களை அழித்திருக்கலாம். இவ் அசோகப் பிராமி வரிவடிவம் ஏனைய வரிவடிவங்களை அழித்திருக்கலாம். இவ் அசோக பிராமி வரிவடிவ அலையிலிருந்து சில நூற்றாண்டுகள் தப்பிப்பிழைத்த தனிவடிவமாக இத் திராவிட வரிவடிவம் இருக்க முடியும் என கருதலாம்.

இதனைவிட பினீசியா இவ் வரிவடிவத்தை இரு வழிகளாற் புகுத்தினர் எனலாம். தரைவழியாக வட இந்திய அசோக பிராமி வரிவடிவமும், கடல் மார்க்கமாகத் தமிழகத் "திராவிட" வரிவடிவமும் இந்தியாவை அடைந்திருக்கலாம்.



பிராமிய கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வு தமிழகத்தில் 1903 ஆண்டில்தான் ஆரம்பமாகியது. வெங்கோபராவ் மீனாம்பு என்ற இடத்திற் கண்டுபிடித்த பிராமிக் கல்வெட்டே இவ்வாய்விற்கு தொடக்கப்பணியாக அமைந்தது.

தமிழக பிராமி கல்வெட்டுகளோ பெரும்பான்மையானவை சமணத்துறவிகளுக்கு கொடுத்த தானமாக அமைய, ஈழத்து பிராமிக்கல்வெட்டுக்களோ முழுக்க முழுக்க பௌத்த துறவிகளுக்கு கொடுத்த தானமாகவே காணப்படுகின்றன.

இக்காலத் தமிழ் வரிவடிவத்தின் மூதாதையராகப் பிராமி வரிவடிவத்தைக் கொள்ளலாம். தமிழ் வரிவடிவம் மட்டுமன்றி வட்டெழுத்து வரிவடிவத்தின் தாயாகவும் இப் பிராமி வரிவடிவம் காணப்படுகின்றது. ஈழத்திலுள்ள பிராமி வரிவடிவமும் பிற்காலத் தமிழ் சிங்கள வரிவடிவங்களின் தாய் வரிவடிவமாக அமைந்துள்ளது. இவ்வாறாக பல மொழிகளின் தாய் மொழியாக அமைந்துள்ளது.

வீரா / மரு. பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்களும் சந்தாதாரராகலாம்!

*நீங்களும் இந்த அறிவியல் பல்சுவை மாசிகையின் சந்தாதாரராகுவதன் மூலம் எமது முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.*
*ஓராண்டுக்கான சந்தா ரூபா. 410 மட்டுமே!*
*கீழே உள்ள மாதிரிச் சந்தாப் படிவத்தைப் பிரதி செய்து அதில் கேட்கப்பட்ட விபரங்களை எழுதி, சுன்னாகம் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக காசுக்கட்டளையை அனுப்பிவைப்பதன் மூலம் அல்லது கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் பணத்தைச் செலுத்தி பற்றுச் சீட்டை அனுப்புவதன் மூலம் "வரை" யின் சந்தாதாரராக இணையுங்கள்.*

காசுக்கட்டளை அனுப்பவேண்டிய முகவரி:
*நிர்வாக ஆசிரியர்,*
*"வரை" வெளியீட்டகம்,*
*மகுடம் அசோசியேற்ஸ்,*
*இணுவில் சந்தி,*
*இணுவில்,*
*யாழ்ப்பாணம்.*

**வங்கித் தொடர்புக்கு:**
R. Thananjeyan
Commercial Bank - Chunnakam
A/C No. 8107004995

## சந்தாப் படிவம்

*முழுப் பெயர்:* ..........................................................................
*முகவரி:* ..........................................................................
..........................................................................
..........................................................................
*பிறந்த திகதி:* ..........................................................................
*தொழில்:* ..........................................................................
*தொ. இல:* ..........................................................................
*சேர விரும்பும் சந்தாக்காலம்:* ..............................................

*திகதி.* ............................ *ஒப்பம்.* ...............................

### "வரை"யுடனான தொடர்புகளுக்கு

இ. தனஞ்சயன் - 0776701661, இ. கிருபாகரன் - 0717884331 (யாழ்ப்பாணம்), நாகராசா சரவணன் - 0777866754 (கொழும்பு), க. அன்பழகன் - 077 2092013, 077 9876937 (வவுனியா, மன்னார்), ஆ.பரமேஸ்வரன் - 0779791366 (மட்டக்களப்பு).

இந்த அறிவியல் பல்சுவை மாசிகை "வரை" குழுமத்தினரால் மகுடம் அசோசியேற்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.
**TP: 021 745 1960**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



VIVAHA
CARDS

அனைத்து வகையான அழைப்பிதழ்களும்
நவீன முறையில், நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு
மிகக் குறைந்த விலையிலும்,
மிகக் குறுகிய நேரத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

சகல விதமான அச்சிடல் வேலைகளும்
கணனிப் பதிப்பாக அச்சிடப்படுகிறது.

**Offset Printing**

திருச்செல்வி

மானிப்பாய். 0212255055

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org